வாழப் பிறந்தோம்: தொடர்ச்சி:

"சோகத்தால் வாடிச் சாகப்படாது; மகிழ்ச்சியால் வெறி கொண்டு தறி கெட்டு அலையப்படாது. அப்போதுதான் வாழ்வின் தாராளம் பழகப்பட்டு ரசனை [illegible] இன்பங்கள் கிட்டுகின்றன." ***

"முன் பின் தெரியாத பல விதமான ஜனங்களோடு அடிக்கடி பழகவேண்டியவர்களுக்கு உடைத்தோற்றம் மிகவும் முக்கியம். உடைத்தோற்றத்தைக் கொண்டே எடுத்த எடுப்பில் நம்மைப்பற்றி மதிப்பிடுவார்கள். எதிரியின் கவனத்தை உடனே இழுப்பது உடைத்தோற்றந்தான். அப்புறந்தான் மற்றவை. ***

"உணர்ச்சி உள்ளத்தின் பசுமை மாறாமல் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும். பழமையை அனுபவத்தின் செம்மையைப் பகிர்ந்து கொண்டு, அதை அவர்களுக்கு ஊக்கமளிக்கச் சதா செலவிட வேண்டும். ***.

"தியாகம், சேவை இரண்டும் இல்லாமல்; உலகம் இன்பம் - துன்பம் இன்பம் -. இவ்வளவு பலவேறுமான ஆசையையும் அறிந்தோ அறியாமலோ இவை இரண்டையும் செய்துக் கொண்டே வருகிறேன். ***

"மனிதர்கள் யாரும் நல்லவராய் இருக்கத்தான் முயல்வார். நிர்ப்பந்தமாகத்தான் தெரிந்தே உபாயங்களைக் கையாளுவார். மனித இயல்பு அடிப்படையில் மாறுபடாதது. கல்லறைக் கட்டு கோப்புகளைச் சூழ்நிலையாலும், தோற்றத்தாலும் வேறுவாக மாற்றி அமைத்து விட முடியும். வாழ்க்கையில் தோல்விக்கு மேல் தோல்வி [illegible] எந்தப் போதும் [illegible] சமானம் அடைந்தவர்கள், சமாளித்துக் கொள்ளலாம். வெறுக்கப்பட்டவர்கள் மனம் ஒடிந்து போக வேண்டியதில்லை. சூழ்நிலையை மாற்றிக் கொள்வதோடு தோற்றத்தையும் பொருத்தமாய் மாற்றிக் கொண்டு பாருங்கள். மந்திர சக்தி மாதிரி ஒரு புது வேகம்; உண்டாகிவிடும். வெற்றிக் கட்டைகள் வளரத் தொடங்கிவிடும். ***

"கலை கூட்டத்துக்குப் போனால் கதர் உடுத்திக் கொண்டு போவார்கள். கல்யாண வைபவத்துக்குப் போனால், ஜரிகை வேட்டி, பட்டுச் சட்டை, துப்பட்டா, புருகை, இவ்வாறு தரித்துப் போவார்கள். ஆபீசுக்குப் போனால் கால் சட்டை, கழுத்துச் சுருக்கு டையோடு போவார்கள்; கோவிலுக்குப் போனால் சைவப் பழமாய் ஆசார உடையாய் போவார்கள்; இவர்கள் மனநிலை அறிந்தவர்கள். சமயத்துக்குத் தக்கபடி உடைத் தோற்றத்தை மாற்றிக் கொள்ளத் தெரிந்தவர்கள். அந்த அந்த இடத்தில் உள்ள சூழ்நிலையோடு பொருந்திப் போய் விடுகிறார்கள். யாரும் இவர்களை வெறித்துப் பார்க்கமாட்டார்கள். தம்மோடு சேர்ந்த ஒருவராகவே மதித்து பழகுவார்கள். இவர்களைக் கண்டு வெறுப்பு இல்லைப் பண்பாகவும்; ஆதரவுக்கு வழி ஏற்பட்டு விடுகிறது. ***

1938 மார்ச்
([illegible])